1073

உ

பரமபதிதுணை

இராஜபாளையத்தில் எழுந்தருளியிருக்கும்

# நீராற்றையனூர் திருத்தாலாட்டு.

சிலதாசம்வாதக்கும்மி, நாமாவளித்திரட்டு, தங்கப்பாட்டுகள், சஞ்சீவிநாதர் திருத்தாலாட்டு அடங்கியுள்ளன.

இஃது

கூத்திபாறை விஸ்வபிரஹ்ம ஸ்ரீமான்

மதுரகவி முத்துக்கிருஷ்ண ராமானுஜ

தமிழ் பண்டிதாவர்கள் மாணாக்கருளொருவராகிய

துரைச்சாமிபுரம் ச. கவிவீரநல்லானவர்களால்

இராஜகோபாலபுரம் ரா. குருசாமி செட்டியார்

விரும்பிய வண்ணம் இயற்றியது.

ஸ்ரீவில்லிபுத்தூர்

சரஸ்வதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

விலை]

1922

MADRAS

# விஷயசூசிகை

இந்நூலை துரைச்சாமிபுரத்தில் சிற்சில வாலியசுகுமாரஸ்திரீகளும் கௌமாரஸ்திரீகளும் பாடித்தரவேண்டுமென்று பலதரமும்வேண்ட இந்நூலாசிரியர்க்கு இக்கவிகளினிடத்து மனம் பற்றாதவரெனினும் பகவத் விஷயமாதல் பற்றி ஒருவாறு பாடியருளினர் இந்நூலை பக்தியுடன் வாசித்தவர்களும் கேட்டவர்களும் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் தருதற்கு ஏதுவாகிய புத்திரப்பேறு முதலிய பெருஞ்செல்வங்களும் முத்திசாதனமும் பெற்று பரமானந்தசுகபோகங்களை அடைவர்என்பதாம்.

இங்ஙனம்
நூலாசிரியர் மாணாக்கர்
ரா. போத்திநாயக்கர்.
துரைச்சாமிபுரம்.

இந்நூலை அச்சிடவேண்டுமென்று கேட்டுக்கொண்ட
கனதனவான்கள்:— துரைச்சாமிபுரம்,

ரா. போத்திநாயக்கர்
போ. கோபாலசாமிநாயக்கர்
சு. சுப்பாநாயக்கர்
கோ. வெங்கிடசாமிநாயக்கர்
நா. வீரப்பநாயக்கர்
சி. கந்தசாமிநாயக்கர்
சி. சுப்பாநாயக்கர்

இந்நூலாசிரியர் இயற்றி அச்சிட்ட நூல்களாவன:— மன்னார்கோட்டை அங்காளதேவிதிருப்பதிகம், பசுந்தைப்பதிகங்கள் மூன்று, பசுந்தைபுத்திரபாக்கியமாலை, பசுந்தைச்சிலேடைவெண்பா, செங்கோட்டைகணேசர்பதிகம் இராஜபாளையம் திருத்தாலாட்டு, சிலதாசம் வாதக்கும்மி நாமாவளித்திரட்டு, தங்கப்பாட்டுகள், சஞ்சீவிநாதர்திருத்தாலாட்டு, சோளவந்தான்தெய்வமணிமாலை.

அச்சிடாத நூல்கள்.

இ[illegible]பாளையம் ஸ்தோத்திரபஞ்சகம், பதிற்றுப்பத்தந் [illegible]தெய்வநாயகமாலை, இங்கிதப்பதிகம், பசுந்தைய [illegible] இவைகூடியசீக்கிரம் வெளிவரும்.

உ

பரமபதிதுணை

# நீராற்றையனுர் திருத்தாலாட்டு

## காப்பு

பாலக்குழந்தைகளை மங்கையர்கள்
பாங்காகத் தொட்டிலிட்டு
தாலக்கவி யுரைக்க ஓர்மருப்புத்
தந்திமுகன் காப்பாமே.

## வித்தியாதேசிகர்வணக்கம்

வித்தகத்தின் மெய்ஞானம் அன்பனுக்கு
வேண்டியருள் *நல்லூர்வாழ்
முத்துகிருஷ்ணதேசிகனுர் பொன்னனைய
முளரிப்பதம் பணிவாம்.

## நூல்

திருப்பாற்கடல் கடைந்து §என்னையா
தெள்ளமிர்தம் வாங்கையிலே
விருப்பாக மோகினிபால் நீராற்றுலிங்கம்
மேவிப்பிறந்தவரோ. (க)

---

* நல்லூர் கூத்திப்பாரை—
§ஒவ்வொருபாட்டுகளிலும் முதலடியீற்றில் என்னையா யென்னுமிடத்து என்கண்ணே, என்பொன்னே, என்னம்மா, என்றுசந்தர்ப்பம்போல் மாற்றி வைத்துக்கொள்க

சித்திரைத்தீர்த்தத்திலே என்
செகமெல்லாங் கொண்டாடி
பத்தியுடன் சூழ்ந்துவர நீராற்றுலிங்கம்
பவனியெழுந்தவரோ. [உ]

மூவாதி தேவர்களும் என்
மும்முறையுங்கொண்டாட
தேவாதி தேவருக்கு நீராற்றுலிங்கம்
திலகமாய் வந்தகண்ணே. [௩]

பொன்னூசற் சங்கிலிகள் என்
பூட்டிவிட்ட பொற்பலகை
தன்னூசற்றெட்டிலே நீராற்றுலிங்கம்
தங்கமலர்க் கண்வளராய். (௪)

மதுரைக்கிளைகளெல்லாம் என்
வாதாட்டம் பேசயிலே
சதிராகத் தான்பேசி நீராற்றுலிங்கம்
சபதானஞ் செய்தவரோ (௫)

வேங்கைகொடி மாமாய் பொன்னயவேள்
வெட்டவந்த வேளையிலே
தாங்குந்தளத் தளத்துடனே நீராற்றுலிங்கம்
தான் கூட்டிக்கொண்டவரோ (௬)

அதிகாரஞ் செய்யயிலே என்
அன்னசத்திரமுண்டுபண்ணி

சதிராக வந்தவர்க்கு நீராற்றுலிங்கம்
தான தருமஞ்செய்தவரோ (௭)

காளிபரமேஸ்வரியாள் என்னை
கனகமணி தொட்டிலிலே
வேளிசையிற்றாலாட்ட நீராற்றுலிங்கம்
மேவி மகிழ்ந்தவரோ. [௮]

தங்கமலை வெள்ளிமலை என்
சந்தமலர்ச்செண்டாக
பங்கரணசூரருடன் நீராற்றுலிங்கம்
பந்துவிளையாடினரோ. [௯]

கொச்சி மலையாளம் என்
குறுணி மஞ்சள் கொண்டுவந்து
அச்சிமடப்பெண்களெல்லாம் நீராற்றுலிங்கம்
அடப்பங்கட்டி நின்றாரோ [௰]

ஈழத்துப்பெண்களெல்லாம் என்
இலைபாக்கு தேங்காயும்
*கூழத்துப்புகையிலையும் நீராற்றுலிங்கம்
கொண்டு வந்து வைத்தவரோ (௧௧]

வாழைபலாமாங்கனிகள் என்
வடநாட்டுப்பெண்களெல்லாம்
தாழைமலர் சூடிவந்து நீராற்றுலிங்கம்
தட்டேந்தி நின்றாரோ [௧௨)

*கூழத்து = பொன்போற்சிவந்த; கூழ் = பொன்.

கலிங்கமணிரத்தினத்தை என்
கப்பல்கப்பலாக அள்ளி
குலிங்கப்பதியரசன் நீராற்றுலிங்கம்
கொண்டுவந்து தந்தானோ [௧௩]

வங்காளப்பச்சை என்
மரகதத்தினீலப்பச்சை
சிங்காரவண்டியிலே நாட்டரசர்
திறைகொடுத்து நின்றாரோ (௧௪)

மூவேந்தர்முத்தளந்து என்
முடிவணங்கிக்கப்பமிட
பாவேந்தர்மாலைதொட்டு நீராற்றுலிங்கம்
பாதம்பணிந்தவரோ (௧௫)

மாகனகநாட்டமரர் என்
வந்துபணிகேட்டுநிற்க
நாகமணிப்பீடிகையில் நீராற்றுலிங்கம்
ராசாங்கம் செய்தவரோ (௧௬)

விண்மணியைக்கண்மணியா என்
மேதினியெலாம் பார்த்து
தண்மதியாற்பொன்னளந்து நீராற்றுலிங்கம்
தான்காக்கவந்தவரோ (௧௭)

மாடன்தவில்முழக்க என்
மலையாண்டியாழ்பாட

கூடன்குழல்பாட நீராற்றுலிங்கம்
கோலநடஞ்செய்தவரோ (௧௮)

நீராற்றுநீராடி என்
நின்றுபணிந்தவர்க்கு
சீராய்வரங்கொடுக்கும் நீராற்றுலிங்கம்
சிவனார்தவக்கொழுந்தோ (௧௯)

சேமத்தேரேறி என்
செம்பவளத்தட்டினிலே
காமன்பவனியென நீராற்றுலிங்கம்
காதலுடன் வந்தகண்ணே (௨௦)

புல்லெல்லாம் பூங்கொடியே என்
புனலெல்லாம் பன்னீராம்
கல்லெல்லாம் ரத்தினமே நீராற்றுலிங்கம்
கரும்பாய் முளைத்தவரோ (௨௧)

பாண்டிவளப்பெண்களெல்லாம் என்
பல்லாண்டு பாடிவர
தூண்டிரதமேறி நீராற்றுலிங்கம்
சூழ்பவனிவந்தவரோ (௨௨)

கந்தருவர் வீணையிலே என்
கானரசம்பாடிநிற்க
இந்திரன்பொற்கொலுவிருக்கும் நீராற்றுலிங்கம்
இனியவரந்தந்தவரோ (௨௩)

பூமாலைவாடிவிடும் — என்
பொன்மாலைதேய்ந்துவிடும்
பாமாலைபாடிவரும் — பாவலர்கள்
பாக்கியத்தால்வந்த கண்ணே — [௨௪]

தங்கமலைவில்லடித்து — என்
சங்கீதம்பாடயிலே
*கங்கைத்தலைமலையான் — நீராற்றுநாதர்
கைத்தாளம் போட்டவனே — [௨௫]

அழகுக்கழகுசெய்து — என்
அழகேந்திரன்போலிருக்க
கழைமதனன் போதாமல் — நீராற்றுலிங்கம்
கண்டுமகிழ்ந்தவரோ — (௨௬]

குச்சையிடாமாணிக்கம் — என்
கொடிமரத்துக்காகுமென்று
இச்சையிட்டுக்கச்சைகட்டி — பொன்னையவேள்
இன்பமுடன் வந்தவரோ — [௨௭)

வீரன் தலைமலையான் — என்
வேண்டும்பணிபுரிய
மாரன்வடிவெடுத்து — நீராற்றுலிங்கம்
மண்ணாளவந்தவரோ — (௨௮)

ராசநகர்வீதியிலே — என்

*கங்கை = தலையில்கைகூப்பிநின்ற; கம் = தலை

ராசாங்கமோடிகொண்டு
வாசமணிமாலைதொட்டு நீராற்றுலிங்கம்
வரங்கள்பலதந்தவரோ [௨௯]

கொச்சைமலடியென்று என்
கோதைமார் பேசாமல்
பிச்சையென்று வந்தவர்க்கு நீராற்றுலிங்கம்
பிள்ளைவரந்தந்தவரோ [௩௰]

கூட்டுவிட்டகரடிபுலி என்
குஞ்சரமான் பஞ்சரபான்
வேட்டையிட்டுக்காட்டைவிட்டு நீராற்றுலிங்கம்
விரட்டி அடித்தவரோ [௩௧]

சொர்னமலைப்பெண்களெல்லாம் என்
சோபனங்கள்பாடிவர
கர்னமணிமாலைதனை நீராற்றுலிங்கம்
கையேந்தத்தந்தவரோ [௩௨]

தங்கமணிச்சங்கிலியால் சங்கிலிமாடன்
தளந்தளமாய்நாய்பிடிக்க
கங்கைநதி நீராடி நீராற்றுநாதர்
காவல்வலங்கொண்டவரோ (௩௩)

வாட்டமுள்ளவாளேந்தி என்
வல்லயமுங்கைப்பிடித்து
வேட்டைகளாடயிலே நீராற்றுலிங்கம்
மேனியெங்கும் வேர்க்காதோ (௩௪]

எங்கெங்கும் வாத்தியங்கள் என்
இடிமுழக்கம்போல் முழங்க
சங்கோசைதான் முழங்க நீராற்றுலிங்கம்
சதிராடிவந்தவரோ (௧௫)

காலிற்சதங்கையிட்டு பொன்னயமேவள்
கச்சைகட்டி வில்லேந்தி
டால்முரசந்தான் முழங்க நீராற்றுலிங்கம்
யானையெனவந்தவரோ [௧௬]

தூயவெள்ளையானையின்மேல் என்
துலங்கவந்தநீலமணி
மாயன்சிவனும் கலந்தணைந்த
மகிழ்ந்துபெற்ற ரத்தினமோ [௧எ]

வண்ணாமாடன் என்
வழிமறித்துநின்றுகொண்டு
விண்ணும்பேசயிலே நீராற்றுலிங்கம்
வீசுவலைபோட்டவரோ (௧அ]

சந்தனப்பொட்டுமிட்டு என்
சவ்வாதுந்தான் பூசி
இந்திரனைப்போல்நடந்து நீராற்றுலிங்கம்
இன்பமுடன் வந்தவரோ (௧௯]

கையிலாசமாமலைமேல் என்
கருமேகம் வந்ததென

பயிலானைமேல்நடந்து நீராற்றுலிங்கம்
பவனியெழுந்தவரோ [௪௰]

பேச்சிராக்காச்சியென்ற என்
பெண்களிருபுறமும்
ஆச்சரியமாய்க்கவரி நீராற்றுலிங்கம்
அன்புடனே வீசினரோ (௪௧]

பூரணையும்புட்கலையும் என்
பொருந்திவிளையாடயிலே
காரணங்கள்தான்பேசி நீராற்றுலிங்கம்
கைச்சரசஞ்செய்தவரோ (௪௨]

பல்வண்ணவெண்குடைகள் வீரபத்திரன்
பச்சைக்குடைபிடிக்க
நீலக்குடைபிடிக்க நீராற்றுநாதர்
நீழலிலே வந்தவரோ [௪௩)

சொர்னக்குடைகளெல்லாம் என்
சூரியனைத்தான்மறைக்க
வர்னக்குடைகளெல்லாம் நீராற்றுலிங்கம்
வரிசையுடன் பெற்றவரோ (௪௪)

நேசச்சரிகலையில் என்
நேர்ப்பார்வைகண்டறிந்து
வாசிச்சுழிமுனையில் நீராற்றுலிங்கம்
வர்துறக்குங்கண்மணியோ (௪௫)

ஆதாரதாரகத்தில் என்
அருணடனந்தான்புரிந்து
மீதூறுமன்பருள்ளம் நீராற்றுலிங்கம்
மேவிவருங்கண்மணியோ (௪௬)

பட்டாடைமேல்சாத்தி என்
பணிகள்பலபூண்டுகொண்டு
கட்டாரியிட்டிமழு பொன்னையவேள்
கைப்பிடித்து நின்றவரோ [௪௭)

ஆயிரத்திரெட்டிதழ்சேர் என்
ஐந்தெழுத்தினுண்பொருளின்
மாயிரத்தினூடுநின்ற நீராற்றுலிங்கம்
பங்கசப்பொற்குஞ்சிதனே [௪௮]

முப்பத்துமுக்கோடி என்
முன்னின்றதேவர்களும்
கப்பங்கட்டிநிற்கையிலே பொன்னையவேள்
கணக்கெழுதி வைத்தவரோ (௪௯)

விண்ணாட்டுப்பெண்களெல்லாம் என்
வெண்கவரிவீசிநிற்க
மண்ணாட்டுப்பெண்களெல்லாம் நீராற்றுலிங்கம்
வரிசைகொண்டுவந்தவரோ [௫௰]

தார்வேந்தர்கைகூப்ப தலையலையான்
சந்தடிகளைவிலக்க

போர்வேந்தர்வாய்புதைக்க நீராற்றுலிங்கம்
புன்சிரிப்புக் கொண்டவரோ [௫௧]

ஐவிரலிக்காட்டுமேட என்
ஆனைமுகன் ஜீவபரன்
தெய்வவரியானமங்கை என்கண்ணே
சேரப்பிறந்தவரோ (௫௨]

காமன்வடிவெடுத்த என்
கட்டழகன்பச்சைமலை
மாமன்மகனை நீராற்றுலிங்கம்
வந்துதித்தகுஞ்சரமோ [௫௩]

கொத்தளந்தநாளியிலே என்
கோடிமனுக்களுக்கு
முத்தளந்துநெல்லளக்கும் நீராற்றுலிங்கம்
முன்னவனேகண்வளராய் [௫௪]

நீலத்திருமேனியிலே என்
நித்திலங்கள்சோதிமின்ன
காலிற்சதங்கைமின்ன நீராற்றுலிங்கம்
காதலனேகண்வளராய் (௫௫]

பாலாட்டும்வெள்ளருவி என்
பன்னீர்முழுகிமின்னார்
தாலாட்டுப்பாடிவர நீராற்றுலிங்கம்
தாமரையிற்கண்வளராய் [௫௬)

மூப்பாழுந்தான்கடந்து          என்
மூலவெளியுங்கடந்து
அப்பாழுக்கப்பாழாய்          நீராற்றுலிங்கம்
அமர்ந்தநடனக்கொழுந்தோ          [௫௭)

பெரியனவுஞ்சிறியனவும்          என்
பேதாதிபேதமின்றி
அரியனவுமல்லனவும்          நீராற்றுலிங்கம்
ஆகிநின்றபொக்கிசமோ          [௫௮]

எண்கோணமந்திரத்தை          மெய்யடியார்
எண்ணுமுச்சரிக்க
பண்வளரக்கண்வளர          நீராற்றுலிங்கம்
பாலகனுவந்தவரோ          [௫௯)

பத்தைந்தகவிதழ்சேர்          விண்டுமலர்
பத்மதளத்தொட்டிலிலே
நித்யசனர்வாழ்த்தெடுப்ப          நீராற்றுலிங்கம்
நித்திரித்தபுத்தமுதோ          (௬௦)

ஐங்கோணச்சக்கரத்துள்          என்
அமர்ந்தசிவலிங்கமுமாய்
வெங்கோடைதீர்க்கவந்த          நீராற்றுலிங்கம்
வேதாந்தமெய்ப்பொருளோ          [௬௧]

முல்லைச்சூழிநடுவில்          என்
முக்கோணவட்டமிட்டு

காவிற்றிருமுடியில் நீராற்றுலிங்கம்
கண்ணுறங்கும் பாலகனே [கஉ)

நாற்கரணச்சங்கிலிகள் என்
நாலுகின்றபொன்னூசல்
பாற்கரனும்பின்வாங்க நீராற்றுலிங்கம்
பங்கயக்கணித்திரைபோ [கங]

அரியமணிபூரகமாய் என்
ஐம்பத்தோராக்ஷரமாய்
துரியநிலைதான்கடந்து நீராற்றுலிங்கம்
சோதிசெய்யவந்தகண்ணே [கச]

நாதாந்தமேல்வீட்டில் என்
நாயகமாய்த்தான் விளங்கி
வேதாந்தத்தொட்டிலிலே நீராற்றுலிங்கம்
மெல்லியலர்க்கண்வளராய் (கரு]

உந்துசுடர்நல்லறிவின் என்
உச்சிவெளிகண்டறிந்து
சந்திரகலையமிர்தம் நீராற்றுலிங்கம்
தானுண்டகண்மணியோ (கசு]

அஞ்சுபுலனறுத்து என்
அகங்காரப்பேய்முடிக்கி
கஞ்சரனற்றொட்டிலிலே நீராற்றுலிங்கம்
கண்வளருங்கண்மணியோ [கஎ]

அங்கக்கரணங்கடந்து என்
அப்பாலுந்தான்கடந்து
கந்தமலரூசலிமேல நீராற்றுலிங்கம்
காதலுடன்கண்வளராய் [௧௮)

அருட்கடலிற்றான்குளித்து என்
அன்பின்வழிவந்தவர்க்கு
பொருட்கரையின்மீதேற்றும் நீராற்றுலிங்கம்
புண்ணியசிலாக்கியனே (௧௯)

திருத்தாலாட்டு
சம்பூர்ணம்

உ

பரமபதிதுணை

# நீராற்றையனார் சிலதாசம் வாதக்

# கும்மி

பூவையரஞ்சலிசெய்யுங்களபப்
பொருப்பிரண்டேந்தியபூங்கொடியே கிளியே
மேவினதாரவனாரெது சொல்லுதி
மெய்யனடிராசைஐயனடி (௧)

அருந்ததியொத்தமடமயிலே யுன்னை
அன்பிற்கலந்தவராரேடி
திருந்துநீராற்றிலிருந்து வரந்தரும்
செய்யபதுமலரையனடி (௨)

மின்னிடைப் பொன்னிகரன்னமேயுன்னை
விரும்பிப்புணர்ந்தவராரேடி
சொர்ணமணிப்பணிபூரணைநாயக
தூயனடிபரகாயனடி (௩)

* கிளியே என்னுமிடத்து—குயிலே, மயிலே, ரதியே என்றுமாற்றிவைத்துக் கொண்டு முதலடியிற்பாதியை யடக்கிச் சொல்லிக்கொள்க.

தங்கத்தனத்தினில் தந்தநகக்குறி
தன்னைப்புரிந்தவராரேடி
திங்கட்டிருநுதல் புட்கலைநாயக
சிங்கம்டியுயர்தங்கமடி (௪]

மேனிவிளர்த்திடக் கொங்கைத்தலங்களும்
விம்மிக்குழைந்ததென்மின்னரசே
கானவரிச்சுரும்பாரலங்கற்புய
காரிகலந்தனனென்னேடி [௫]

கள்ளவிழ்பூங்குழற்காரிகையேயுன்றன்
கற்பையழித்தவராரேடி
வெள்ளைமதக்கவளக்கரகுஞ்சர
வித்தாரடிநடனத்தாரடி [௬)

தெய்வச்சுவையமுதுள்ளிட்டகண்கள்
சிவக்கப்புணர்ந்தவராரேடி
மெய்வைத்தபொன்னடி யார்வினைதீர்த்தருள்
வேந்தனடிகுணசாந்தனடி (௭]

தேனைக்கசக்கிய செஞ்சொல்விளங்கொடி
தெய்வச்சிகாவள மெல்லியலாய்
மீனைக்கசக்குங்கருங்கண்மடவன்ன
மேயுனைச்சேர்ந்தவராரடியே (௮)

அண்டமுமெண்டிசை மண்டலமுண்டுமிழ்
ஆதிபகவதச்சேயிழையும்

கண்டமணியானுங் கலந்தின்றருள்
காதலன்சேர்ந்தனன் என்னேடி (௯)

விண்ணிடையங்கசன் பூங்கொடிவெள்கிய
மின்னிடையன்னம் பொருதநடை
கண்ணிடைநஞ்சுங்கலந்த கனங்குழை
காதலிற்சேர்ந்தவராரேடி (௰)

ஈசத்தனிநகர் வாசத்துடன்வளர்
நேசப்பிரபுவிலாசனுமாய்
காசிற்கருமணியோசைப் பெருங்கடல்
கண்டுகலந்தனனென்னேடி (கக)

கோலவரிக்க்ருமாங்குயிலேயுன்னைக்
கூடிக்கலந்தவராரேடி
நீலவரிக்கருங்கொண்டலான்பெற்ற
சித்தனடி திடசித்தனடி (கஉ)

அன்னநடைப்பெண்களாரமுதேயுன்னை
யன்பிற்புணர்ந்தவராரேடி
பொன்னைய தீரவுதாரநகப்பிரான்றன்
*போதனடி ஜெகநாதனடி (கங)

வாசமலர்த்ருவேயிழ்தபற்குறி
வைத்துக்கலந்தவராரேடி
ராசநகர்க்கதியோகதுரந்தர
ராசனடி யன்பர்நேசனடி [கச]

*போதன் — ஞானாசிரியன்

விம்பமதிச் செழுவெண்சுடர்வீசிய
மென்முகப் பொன்முகச்சித்திரமே
கம்பவளத்தனிச் செம்*பவளக்கயம்
கைப்பற்றிச்சேர்ந்தவராரடியே [௧௫]

மைக்கட்கருங்குழற் குஞ்சரிவள்ளி
பணைதுணை ஆலேசனுமாய்
செக்கர்க்கலபச் சிகாவளமேவிய
சேந்தற்கிளையவனென்னேடி (௧௬)

வாசக்களபப்படீரப் பன்னீர்க்குளிர்
மான்மதச்சந்தச் சவ்வாததுதே
§ பாசக்களபக் ¶ குயாசலத்தேகம்
பரிமளஞ்செய்குவதேததுவே [௧௭]

மைக்கோதையிற் பூமலர்ச்சூடிச்சர்க்கரை
மாமதுரக்கனிவாசகியே
கொக்கோகநற்காணைக்கனலீலை
குளித்துக்களித்தனன் மாசகியே [௧௮]

லீலையிற்சம்பிரம்தாயனை யென்னிடம்
நேராகச்சேர்த்திடிலாய்குவனே

---

* பவளக்கயம்—சிவந்தயானைகள்; அது தனங்கள்

§ பாசக்களபம்—தொடர் பூட்டிய யானைகள்

¶ குயம் = தனம்.

கோலையிற்கண்மட மாதரசேயுன்னைக்
கோடிநமஸ்காரஞ் செய்குவனே (கக

நித்தத்தனிப் பொற் பதத்தைத் துதித்துப்பொன்
நேரிழை மாமயி லேயன்னமே
சித்தத்தினிக்கத் தொனிக்கப்பதஞ்சொல்லித்
தெரிசனஞ்செய்திட வாமுன்னமே [உ௰]

சிலதாசம் வாதக்கும்மி சம்பூரணம்

## நீராற்றையனூர் நாமாவளித்திரட்டு.

### காப்பு

தந்தாவளமுக நாடினனே
சந்தாவளமொடு பாடினனே

### நூல்

ஐயனெனும் பெயர் பூண்டவனே
அன்பர்கள் தங்களையாண்டவனே [க]
தருமம் வளர்த்த தயாநிதியே
சத்திய நித்திய மாபதியே [உ]
அருட்கடலாழ்ந்து படிந்தவரே
அகிலபுன்மாயை கடிந்தவரே [ங]
* மூவெழுதலைவர்களதிபதியே
நாவெழுபுலவர் கணிதிபதியே [ச]
சகளவுபகள போதாதா
உகளபதமலர் தா தா தா [ரு]
படளாகுணாகர காரியனே
பத்மபதந்தரு வீரியனே (கூ)
ஞானதிவாகர சோதியனே
நலமருள்புரிதரு நீதியனே [எ]

* மூவெழுதலைவர்கள்—இருபத்தியொருபந்தி தேவதைகள்; அது சிவகணத்தலைவர்களிலுள்ளார்.

மோனகுணாகர முன்னவனே
முனிவர்கள்புகழ் சம்பன்னவனே [௮]
பொன்னயவீரர் சௌக்கியனே
பூதல மீதகு பாக்கியனே [௯]
புட்கலைகும்ப முலைப்புயனே
பூரணையின்ப நிலைப்பயனே (௧௰)
கருமலைவளர் பவவினையேனை
கழலிணையல்லது நினையேனை [௧௧]
ஆகமவீதிகடந்தவனே
அன்பர்கள் சிந்தைகடந்தவனே [௧௨]
எனதிருதயமலர் சித்தமதே
இன்பரசந்தருபுத்தமுதே [௧௩]
சுந்தரபங்கள ரஞ்சிதனே
எங்களுளந்தருகுஞ்சிதனே (௧௪)
சந்திரவிம்பமுகத்தவனே
சற்சனர்தங்களகத்தவனே (௧௫)
ஆகமவேதபுராதனனே
அடையலர்தங்கள் குரோதனனே (௧௬)
மறைவளருறைபொருள்கண்டவனே
மாயையிருட்கடல் விண்டவனே (௧௭)
தலைமலையன்பனளித்தவனே
சதுர்மறையும் பல்கணித்தவனே (௧௮)

அண்டலர் செய்கை பழித்தவனே
தொண்டர்கள் வினையை யொழித்தவனே (௧௯)

ஆரியனம் புயவடியவரே
அமரபுரிமணி முடியவரே [௨௰]

தவளமதமலை வாகனனே
பவளவிதழுடையாகனனே (௨௧)

புலவர்கள் புகழ்தரு போதகனே
புண்ணிய கண்ணிய நீதகனே (௨௨)

சந்ததமடியவர் பார்ப்பவனே
சஞ்சித வல்வினை தீர்ப்பவனே (௨௩)

நடனபரிபுர பங்கசனே
நதிபதி வருணனையங்கசனே (௨௪)

படலவறிவுறு சிந்திதனே
பலகலை புலவர்கள் வந்திதனே (௨௫)

வேதாந்த புத்தகமேயினனே
நாதாந்த வித்தக மாயினனே [௨௬)

ஐயன்பதமலர் கண்டேனே
அருளெனு நல்லமுதுண்டேனே (௨௭]

சகுணகுணவடிவழகினனே
சர்ச்சனர்சபையொடுபழகினனே [௨௮)

அரிகரகுமரகுலேசுரனே
பிரபலநிபுணபலேசுரனே [௨௯)

அழகுகுநிறை புனநதியினனே
அடியனையாண்டருள் நிதியினனே (௩௰]

சம்பூர்ணம்

## நீராற்றையனூர் மேல்

### தங்கப்பாட்டுகள்

கொஞ்சுகிளிவாகன் வஞ்சியர்சையோகன்
குஞ்சரநற்பாகன் ரஞ்சிதகவிவேகன்
வஞ்சர்களையாளான் வந்தருள்செய்தாளான்
மஞ்சனையமேதகன் நஞ்செயவைபோகன்
வெண்பரியிலேறி நண்புடனேமீறி
கந்தருவரோடும் செந்தமிழ்கள்பாடும்
ராசங்கர்வந்தான் நற்கருணைதந்தான்
என்னைச்சொந்தமேவினே இன்பரசமானே

ஆதிமறைமுன்பனடி
அன்பனுக்கும் அன்பனடி
வீதிவரக்கண்டேனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
மிக்கமையல் கொண்டேனடி (க)

அன்புடைமைதேரி அண்டலர்குடாரி
துன்பவினைவாரி ஆரவிடுகாரி
தொல்லைவினைகர்மம் இல்லைபுரிதர்மம்
பூரணமணாளன் புண்ணியகுணாளன்
சிற்பரசுகத்தன் தற்பரமசத்தன்
அற்புதவிகத்தன் பொற்பமையகத்தன்
கபவுபுகழ்மேவா கதிபெருகவாவா
என்னுடைதேனே இன்பவிழிமானே

ஒண்ணுதலார்மாரனடி
உத்தமவுதாரனடி
நண்ணலர்கள்தீரனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
நடனசிங்காரனடி [௨]

சித்தசனைவாட்டி முத்தனகைகாட்டி
பத்மவிழிநாட்டி பாவலர்கள்பேட்டி
கண்டுவரநின்றான் அண்டலரைவென்றான்
பண்டைவினைதீர்த்தான் தொண்டர்களைக்காத்தான்
புட்கலையுலாசன் நட்புடையவாசன்
விஞ்சுபுகழாகன் வஞ்சியர்கள் மோகன்
ரஞ்சிதவைபோகன் மிஞ்சியவிவேகன்
தேசமகிழ்அய்யன் வாசமிகுமெய்யன்

பாசவினைநாசனடி
நேசருபதேசனடி
ஆஞ்சயுலகீசனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
ராசநகர்வாசனடி (௩)

அண்டர்முனிவோரும் விண்டுமுதலோரும்
தொண்டுசெயநேரும் கொண்டமிகுசீரும்
சல்லரிதடாரி வல்லவிசைபூரி
நல்லபய்பைதாரி சொல்லரியதூரி

மத்தளமெக்காளம் தித்திகுழல்தாளம்
வளதுகொம்புதாரை வாதுவம்பினேரை
வாட்டியமுழங்க நாட்டியதழங்க
நடனகெம்பீரன் படனசிங்காரன்

நம்மைமுகம்பார்ப்பனடி
நல்குரவுதீர்ப்பனடி
நற்கதியிற்சேர்ப்பனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
நம்பினரைகாப்பனடி [௪)

சந்தனபடீரம் குங்குமவசீரம்
தண்ணளிகதம்பம் மண்ணுலகிலெங்கும்
கங்கமெனமோது இங்கிதசவ்வாது
வீசுமணநன்னீர் பேசரியப்பன்னீர்
பூசுகருமேகம் தேசுலவுதேகம்
கண்ணியமுடிப்பான் எண்ணியகொடுப்பான்
வல்வினைவெருட்டி நல்வினைதிரட்டி
தோகைமயில்மாது பாகினுரைதூது

புல்லறிவுநாணுமலை
போதமதுபேணுமலே
வல்லவினைக்காணுமலை அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
வாடுதடியென்மனசு [௫]

அரிகரகுமாரன் அமிர்தகுணதீரன்
அதிமதுரசாரன் அடியர்களபாரன்

அசராசரவீரன் அமலபதகாரன்
அணிதாளவாரன் திணிபுயபடீரன்
கமலபதமேவி கதிபெறவ்வாவி
கருதுவதுமின்பம் கவலைதருதுன்பம்
கலியதுபறந்து பொடிபடுமிறந்து
கலபமயிலனையா இதுசரதனையாய்

இன்பசுககாரனடி
இராசநகர்மோனனடி
அன்புடையர்தீனனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
ஆதிசிவஞானனடி [௬]

தத்துவகுணலன் உத்தமச்சீலன்
வித்வாசமேலாலன் சத்திசிவபாலன்
நித்தியமனோலன் புத்திநல்விசாலன்
இத்தரையின்மேலன் சித்திசெய்பலாலன்
செல்வமதுதந்தான் தீவினைகடிந்தான்
கல்வியதுகந்தான் கல்லியமிகந்தான்
வில்வமதணிந்தான் வெல்வதுதுணிந்தான்
நல்வளமிருந்தான் ராசநகர்வந்தான்

வேதாந்தவீதியடி
வேதப்பொருளாதியடி
நாதாந்தசோதியடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
நாடுதடிஎன்மனசு [௭]

சத்தியசன்மார்க்கன் சித்தநிடதீர்க்கன்
நித்தியபாரார்க்கன் வித்வசனராக்கன்
முத்தியதுதந்தான் முன்னுவர்முன்வந்தான்
நத்துகடல்வென்றான் ராசநகர்நின்றான்
வீசுபுகழ்தேங்க வெங்கலிபின்வாங்க
பாசவினையேங்க பல்வள்முமோங்க
வந்தெனைக்கண்பார்த்தான் சிந்தையிடர்தீர்த்தான்
நொந்தவரைக்காத்தான் பந்தமதையீர்த்தான்

மங்களகல்யாணனடி
சங்கதமிழ்வாணனடி
தங்கமணிப்பூணனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
துங்கராணபாணனடி [அ]

மூவெழுகணத்தர் முன்வருகுணத்தர்
நாவெழுமணத்தர் நன்மைசெயெணத்தர்
பொன்னடிவணங்கி நன்னெறியிணங்கி
துன்னலர்பிணங்கி இன்னலிலுணங்கி
வாடியொருகாத நேடிவழிபோத
தொல்லைவினைதானே இல்லைமதிமானே
நல்குராவுநீக்கி செல்வமதுதேக்கி
நளினமலர்தந்தான் அடியன்முனம்வந்தான்

சித்தமலர்ப்பீடனடி
நித்தியசந்தோடனடி
ரத்னமணிக்கூடனடி அன்னமே
தங்கமே-தங்கமே-தங்கம்
ராசவளநாடனடி [சு]

பக்கமதுநாடி பாவியர்வீடோடி
பாவையரைத்தேடி பண்புடனேகூடி
பந்தவினைமூடி பஞ்சுவைவையாடி
பாழியவின்வரடி பற்றுவதென்னேடி
பண்ணவர்கள்கோமான் மண்ணவர்கள்சீமான்
பங்கசனற்காலன் யற்றலர்கள்காலன்
பாங்குதருமாசை ஓங்குதருராசைத்
தெய்வமதையின்னே சேர்த்திடுகமின்னே

ஐயனையானனடி
மன்னையமைகானனடி
ஐயனெனும்பேரானடி அன்னமே
தங்கமே தங்கமே-தங்கம்
அன்பனைவிட்டுப்போானடி [௰]

தங்கப்பாட்டுகள்
சம்பூர்ணம்

## சஞ்சீவிமலையிலெழுந்தருளியிருக்கும்
## சஞ்சீவிநாதர் திருத்தாலாட்டு

### நூல்

கொடிமேற் கொடிப்படர்ந்து சஞ்சீவிநாதர்
கொழுந்துவிட்டு நிற்கையிலே
அடியாருக்கென்றுசொல்லி சஞ்சீவிநாதர்
அருண் மருந்து தந்தவரோ (க)

சஞ்சீவிலிங்கம் என்னையா
சண்பகப்பூ வாசலிங்கம்
கஞ்சியில்லையென்பார்க்கு சஞ்சீவிலிங்கம்
கனவமிர்தந்தந்தவரோ (உ)

புள்ளிமானுசனத்தில் என்னையா
பொன்வண்டு தாலாட்ட
அள்ளிமலர்த்தேன் குடித்து சஞ்சீவிநாதர்
அம்புயப்பூங்கண்வளராய் [௩]

கானமயிலாடக் என்னையா
கருவண்டிசை பாட
ஞானவழி நூல்படித்து சஞ்சீவிநாதர்
நல்லவரந்தந்தவரோ [௪]

ஆராருனைமதியார் என்னையா
அம்பலத்தேவைக் காதார்
தாரார் பொன்னையள்ளி சஞ்சீவிநாதர்
தங்கமே நியுறங்கு (௫)

வள்ளத்தேன் வாய்வடிந்து என்னையா
மகிழ்ந்து விளையாடுகின்ற
பிள்ளைக்கலிதீர்க்கவந்த சஞ்சீவிநாதர்
பேராசேநித்திரைபோ (சு)

விண்படர்ந்த சந்தனத்தில் என்னையா
மெல்லிய வண்டேறுமென்று
சண்பகத்தின் சோலையிலே சஞ்சீவிநாதர்
தான்சயனஞ்செய்தவரோ [எ]

சந்திரனுஞ் சூரியனும் என்னையா
தன்னிரண்டு கண்ணாக
இந்த வுலகமெல்லாம் சஞ்சீவிநாதர்
எறிட்டுப் பார்த்தவரோ [அ]

பலமலர்கள் சாத்தி என்னையா
பணிந்து தவஞ்செய்தவர்க்கு
மலடென்று சொல்லாமல் சஞ்சீவிநாதர்
மடிப்பிச்சை தந்தவரோ (கூ)

சீமைபுகழ்சஞ்சீவி என்னையா
தேசிகனார் தன்னருளால்
கர்மண்விடிவெடுத்து கண்டவர்கள்
காதலுறவந்தகண்ணே [ω]

முல்லைமலரெடுத்து என்
முத்துமுத்தாய்க் கோர்க்கையிலே
அல்லிமலரென்று சொல்லி சஞ்சீவிநாதர்
அணிந்து மகிழ்ந்தவரோ (கக)

வேங்கைமரம் பொன் பொரிய என்
மெல்லிய பூங்கையேந்த
மாக்குயில் களிசைபாட சஞ்சீவிநாதர்
வரத்தாற்பிறந்த கண்ணோ (கஉ)

பவரணையிலே விரதம் என்
பாகாயிருந்தவர்க்கு
சிவமகிமை தந்துரைத்த சஞ்சீவிநாதர்
செல்வமே கண்வளராய் (கங.)

மானேமரகதமே என்
மாங்கனியின் றீங்கனியே
தேனே திரவியமே யெங்கள்குலம்
செய்த தவக்கொழுந்தோ [கச]

மழையில்லாப்பயிர் போல என்னையா
வாடுகின்றுயிர்களுக்கு
*கழைபோற்பொருள்கொடுக்கும் சஞ்சீவிநாதர்
கருணைமழை தந்தவரோ (கரு]

காவியுடைதரித்து என்னையா
கழுத்திலேயுத்திராச்சம்
வாவிசுனைநீராடி சஞ்சீவிநாதர்
மாதவங்கள் செய்தவரோ [கசு]

தண்டுகமண்டலமும் என்னையா
தன்னிரண்டுகையேந்தி

* கழை = கரும்பு

விண்டலத்தைக்கண்பார்த்து சஞ்சீவிநாதர்
வேணுதவஞ்செய்தவரோ (கஎ]

இக்கெல்லாங்கொண்டாடி என்னையா
சீமையெங்கும்பேர்படைக்க
அக்கரங்களுச்சரித்து சஞ்சீவிநாதர்
ஆதரிக்கவந்தவரோ [கஅ]

கஞ்சாப்புகையிலையும் என்னையா
கர்ப்பூரவெற்றிலையும்
கெஞ்சாரத்தந்தவர்க்கு சஞ்சீவிநாதர்
நேராகவந்தவரோ (க௯)

அரசாங்கஞ்செய்யயிலே என்னையா
திருஷ்டிபார்வைதான்பார்த்து
பரதேசிமார்களுக்கு சஞ்சீவிநாதர்
பாக்கியங்கள் தந்தவரோ (உ௦)

செம்பொன்னொளிவிளங்க என்னையா
செம்புக்கடுக்கனிட்டு
நம்பினவர்தங்களுக்கு சஞ்சீவிநாதர்
நல்லவரந்தந்தவரோ [உக)

சஞ்சீவிமாமலையில் என்னையா
தரும மடங்கட்டிவைத்து
குஞ்சரங்கள்காவல்வர சஞ்சீவிநாதர்
குகையிலமர்ந்தவரோ [உஉ]

வேதம்பணிந்துவர என்னையா
விந்தையர்கள் தான்முழங்க
பாதம்பணிந்தவர்க்கு சஞ்சீவிநாதர்
பாலன்னந்தந்தவரோ (உ௩)

விதியென்ற மாமுனியை என்னையா
விண்ணோட்டிப்போகவிட்டு
கதியென்றுவந்தவர்க்கு சஞ்சீவிநாதர்
கைலாகுதந்தவரோ [உ௪]

இகவாசைவாஞ்சைவைத்து என்னையா
இல்லையென்றுபோனாலும்
மகவாசைகொண்டவர்க்கு சஞ்சீவிநாதர்
வரங்கொடுக்கவந்தவரோ [உ௫]

மண்ணாசை பொன்னாசை என்னையா
வாஞ்சைவைத்தபேர்களுக்கும்
பெண்ணாசைகொண்டாலும் சஞ்சீவிநாதர்
பேரின்பந்தந்தவரோ (உ௬)

கார்த்திகையிலேவிரதம் என்னையா
கருத்தாயிருந்தவர்க்கு
சாத்திரத்தின்வழியறிந்து சஞ்சீவிநாதர்
சந்ததியைத்தந்தவரோ [உ௭]

வெள்ளிக்கிழமையிலே என்னையா
விரதம்புரிந்தவர்க்கு
பிள்ளைவரந்தான்கொடுத்து சஞ்சீவிநாதர்
பெருகிருக்கச்செய்தவரோ [உ௮]

கள்ளிருக்கும் நறுங்கூந்தல் என்னையா
கன்னிவள்ளிநாயகனை
துள்ளுமயில்வாகனனை சந்நிதிநாதர்
துணையாகக்கொண்டவரோ (௨௯)

பத்தியுடன்வந்துவந்து என்னையா
பாதம்பணிந்தவர்க்கு
முத்தியுலகங்கொடுத்து சந்நிதிநாதர்
மூவுலகுங்காத்தவரோ [௩௰]

## திருத்தாலாட்டு
சம்பூர்ணம்



இந்நூலாசிரியர் இயற்றி அச்சிட்டநூல்களாவன:—

மன்னார் கோட்டை அங்காளதேவி திருப்பதிகம்

பசுந்தைப் பதிகங்கள் மூன்று

பசுந்தை புத்திரபாக்கிய மாலை

பசுந்தைச்சிலேடை வெண்பா

செங்கோட்டை கணேசர்பதிகம்

இராஜபாளையம் திருத்தாலாட்டு

சிலதாசம் வாதக்கும்மி

நாமாவளித்திரட்டு

தங்கப்பாட்டுகள்

சஞ்சீவிநாதர் திருத்தாலாட்டு

சோளவந்தான் தெய்வமணி மாலை

அச்சிடாதநூல்கள்.

இராஜபாளையம் ஸ்தோத்திர பஞ்சக பதிற்றுப்பத்
தந்தாதி

தெய்வநாயகமாலை

இங்கிதப் பதிகம்

பசுந்தை யமகவந்தாதி

இவை கூடியசீக்கிரம் வெளிவரும்.